



அளவர் / உதவி வரைவாளர்

மேற்பார்வையாளர்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP)

நாகப்பட்டினம் மாவட்டம்

<u>தெத்தி ஊராட்சி</u>

நாகப்பட்டினம் மாவட்டம் / வட்டம் / ஊராட்சி ஒன்றியம், தெத்தி ஊராட்சி / கிராமம், சர்வே எண்332/14B -ல் 2.72 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : QJZGD001
அளவு : 1:400
கோப்பு எண் :
குறிப்பு:

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பளவு | : | 2.72 ஏக்கர் (அ) 11000.00 ச.மீ |
| உத்தேச சாலை (மு) மூலை முடக்கு | : | (-) 2318.50 ச.மீ |
| | | 8681.50 ச.மீ |
| கோரிய மனைகள் | : | 57 |
| ஒதுக்கிய மனைகள் | : | 57 (EWS மனைகள் உட்பட) |
| மனைப்பிரிவின் எல்லை | : | |
| நிலையிலுள்ள சாலை | : | |
| EWS மனைகள் | : | 17 NOS (29-42, 47-49) 910.32 ச.மீ (10.48%) |

## A. பொது ஒதுக்கீடு

(உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மிதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

| | | | |
|---|---|---|---|
| பூங்கா | : | 871.17 ச.மீ | (10.03%) |
| உத்தேச சாலை, சாலை விஸ்தரிப்பு மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு | : | 2318.50 ச.மீ | |

## B. பொது உபயோகம்

**TNCD & BR 2019 47(8)** -ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட **1%** ஒதுக்கீடு

1. உள்ளாட்சி ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பளவு : 50.00 ச.மீ **(0.57%)**
2. **TANGEDCO** -க்கு ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக மனை பரப்பளவு : 50.98 ச.மீ **(0.59%)**

| <u>உத்தேச சாலை:</u> | <u>மூலை முடக்கு:</u> |
|---|---|
| 7.2 மீ சாலைகளுக்கு | 1.5 மீ x 1.5 மீ |
| 9.0 மீ சாலைகளுக்கு | 1.5 மீ x 1.5 மீ |
| 10.0 மீ சாலைகளுக்கு | 1.5 மீ x 1.5 மீ |

## நிபந்தனைகள்:

1. அரசாணை எண்.18-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைபிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண்.181-ன் வீட்டு வசதி (ம) வளர்ச்சித் துறை ந.வ4(1), நாள்.09.12.2020 -ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. அரசாணை எண்.16-ன் நகராட்சி நிர்வாகம்(ம)குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைபிடிக்க வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாயளம் நில ஆர்ஜித நடவடிக்கை எடக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி நிர்வாக அதிகாரி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசிலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்ப ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்/ஆணையாளர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விணணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப்பத்திரம் - குத்தகை பத்திரம்-பட்டா-தானப்பத்திரம்-பொது அதிகார பத்திரம் மேலும்பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்தறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
9. நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வெண்டும்.
10. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
11. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார்சாலை அமைக்கபப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர்/யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**SWP/DTCP/NAGAPATTINAM/LAYOUT NO - 02/2022**

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலவலகம்,
நாகபட்டினம் மாவட்டம்.

*Signature Not Verified*

*Signed by: Deputy Director*
*Location:Nagapattinam*
*Date:2022.10.19 15:48:02*